மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வேதாரண்யம்.

முன்னிலை: திருமதி.ஞா.லிசி, B.A.B.L.(Hons.)., M.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
வேதாரண்யம்.

2020ஆண்டு மார்ச் திங்கள் 06ஆம் நாள் வெள்ளிக்கிழமை

## அசல் வழக்கு எண்.52/2012ல் இடைநிலை மனு எண்.113/2013

1. கணேசன்
2. கந்தசாமி
3. டாக்டர் சுப்பிரமணியம்
4. தனபால் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/ எதிர் /

மைனர் ஜெயசீலன் அவருக்காக
காப்பாளரும் தந்தையுமான
மோகனசுந்தரம் மூலமாக. ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இன்று 06.03.2020ஆம் தேதி என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வ.அரசு அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.குமரவேல் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதம் மற்றும் ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

### ஆணையுரை

ஆணையுறுதி ஆவணத்தில் கண்டுள்ள காரணங்களுக்காக இ.ம.எண்.150/2012ல் ஆணையர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையினை நீக்கரவு செய்து தாவா புல எண்.57/3பி1 மற்றும் 57/3பி2 சொத்துக்களை அளவையர் உதவிக்கொண்டு அளந்து எல்லை

நிர்ணயம் செய்து அதன்படி வரும் பூஸ்தி விவரங்களுடன் அறிக்கை தாக்கல் செய்ய ஆணையர் நியமனம் செய்ய பரிகாரம் வழங்கி உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு உ.ந.ச. வகுமுறை 26 விதி 10(2) மற்றும் 151ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுவுரையின் சுருக்கம்</u>**:

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள். அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மனுவானது கட்டளை 26, விதி 10(2) உடன் இணைந்த பிரிவு 151 உ.வி.ச.யின் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்தான புல எண்.57/3பி என்பது புல எண்கள்.57/3பி1 மற்றும் 57/3பி2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பழைய புல எண்.57/3. அதன் திட்ட விஸ்தீரணம் 9 ஏக்கர் 70 சென்டில் 1 ஏக்கர் 22 செண்ட் எதிர்மனுதாரரின் பாட்டனார் பாப்பு கவுண்டரால் 03.02.1964ல் பதிவு செய்யப்பட்ட கிரயம் பெறப்பட்டுள்ளது. இதற்கு தென்புறம் 06.08.1966ஆம் தேதியில் 2 ஏக்கர் 80 சென்ட் 1ஆம் எதிர்மனுதாரர் பெயரிலும் 24.08.1966ல் 2 ஏக்கர் 72-1/3 சென்ட் அவரது மனைவி குஞ்சம்மாள் பெயரிலும் கிரயம் பெறப்பட்டு அனுபவித்து வந்ததாலும் மேற்படி சொத்திற்கு வடபுறத்தில் 1 ஏக்கர் 22 சென்ட் மட்டுமே பாப்புக்கவுண்டருக்கு சொந்தமாக இருக்கிறது. ஆனால் புல எண்.57/3 உட்பிரிவு செய்தபோது 0.56.5 ஏர்ஸ் எதிர்மனுதாரரின் பாட்டனார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுவிட்டது. அதனை எதிர்த்து எடுக்கப்பட்ட மேல்நடவடிக்கையில் புல எண்.57/3பி என்பது 57/3பி1 மற்றும் 57/3பி2 என உட்பிரிவு செய்யப்பட்டது. அதில் 57/3பி2-க்கு 1ஆம் மனுதாரர் பெயரில் பட்டா வழங்கப்பட்டு அந்த இடம் அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது. அந்த சொத்திற்கு அடுத்த 1ஆம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ஒரு பகுதியும் புல எண்.57/3பி1 உள்ளது. இந்நிலையில் பாப்புக் கவுண்டர் கிரயம் பெற்ற 1 ஏக்கர் 22 சென்ட் இடத்தைதான் எதிர்மனுதாரருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். இந்நிலையில் அசல் வழக்கானது 0.54.0

ஏர்ஸ் இடம் எதிர்மனுதாரரின் அனுபவத்தில் இருப்பதுபோல் தவறான வகையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேலும் 37/3பி2 உள்ள பனைமரமும், சவுக்கையும் அவரது அனுபவத்தில் இருப்பதுபோல தவறாக குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் எதிர்மனுதாரர் வழக்குடன் இ.ம.எண்.150/12 தாக்கல் செய்து எதிரவர் இல்லா உத்தரவு பெற்றிருப்பது தெரியவந்தது, வழக்கு சொத்தை அளந்து எல்லை நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் இருப்பதால் மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இ.ம.எண்.150/12ல் வழக்குரைஞர் ஆணையர் மனுதாரர்கள் முன்னிலையாக நிலையில் நிலத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்களுக்குரிய முன்கூட்டிய அறிவிப்பு கொடுக்காமலும், உரிய சந்தர்ப்பம் வழங்காமலும் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை ஏற்றுகொள்ளக்கூடியதல்ல எனவும், வழக்கு சொத்தை நிலஅளவையர் கொண்டு அளக்க வேண்டியது அவசியம் என்பதால் இந்த மனு அனுமதிக்க வேண்டியது அவசியம் என வாதிடப்பட்டது.

3) எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை.

4) தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய விஷயம் யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

5) இ.ம.எண்.150/2012-ல் இம்மனுவின் மனுதாரர் வாதி மற்றும் எதிர்மனுதாரர் பிரதிவாதி ஆவார். இ.ம.எண்.113/2013-ல் அசல் வழக்கின் பிரதிவாதி மனுதாரராகவும் வாதி எதிர்மனுதாரராகவும் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இ.ம.எண்.150/12 கடந்த 20.06.2012-ல் ஒருதலைப்பட்சமாக அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளது. இ.ம.எண்.113/2013-ம் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய தாக்கல் செய்யப்பட்டது. அம்மனுவும் கடந்த 26.06.2014ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**6)** I.A.113/2013 என்ற இம்மனுவானது ஏற்கனவே **26.06.2014**-ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த C.R.P.(PD) No.3506 of 2014 and M.P.No.1/2014, Dt.05.09.2019 உத்தரவினை நிறைவேற்றும் பொருட்டு I.A.113/2013 ல் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை நீக்கரவு செய்யப்படுகிறது. மேலும் I.A.150/2012 -ன் கீழ் நியமித்த வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் நீக்கரவு செய்யப்படுகிறது. I.A.150/2012-ல் வழக்கறிஞர் ஆணையர் சரியான முறையில் இருதரப்பினர்களுக்கும் அறிவிப்பு வழங்காமல் மனு சொத்தை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பித்து இருப்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டும் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படியும் புதிதாக வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்படுகிறது.

**7)** முடிவில், நீதிமன்ற ஆணையராக திரு. பால. மதியழகன், பி.ஏ.,பி.எல்., அவர்களை நியமனம் செய்து மனுச்சொத்தினை பார்வையிட்டு அதன் இயற்பியல் தன்மை மற்றும் அமைப்புகள் குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. நிலஅளவையர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ.**5,000/-**த்தை மனுதாரர் நேரடியாக செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய: **07.04.2020.**

இந்த ஆணையுரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் எழுதி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று **2020**ஆம் ஆண்டு மார்ச் திங்கள் **06**ஆம் நாள் இந்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், வேதாரண்யம்.

இணைப்பு: இல்லை

மா. உ. & கு. ந.

நேரிய / வரைவு ஆணையுரை

அசல் வழக்கு எண்.**52/2012**ல்

இடைநிலை மனு எண்.**113/2013**

நாள்: **06.03.2020**